1971 ஜூலை 2]

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ஜீப் பஸ் சர்வீஸ் நஷ்டத்தில் ஓடுவதால், தனியார் அவற்றைச் சரிவர நடத்துவதில்லை. அவர்கள் கைவிட்டு விட்டால் அரசாங்கமே வேறு வகையில் அவற்றை எடுத்துச் செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு கருத்து இருந்து வருகிறது. ஆனல் அரசாங்கம் இப்பொழுது அது பற்றி எந்தவிதமான ஆலோசனையோ அல்லது திட்டமோ வைத்திருக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அரசினர் தீர்மானம்.

வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் "வகுப்பு II பிற உறுப்பினர்கள்" என்ற தலைப்பின் கீழ் (h) பகுதிக்கிணங்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் முடிவு செய்யும் ஒரு நாளன்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக வாரியத்திற்கு ஓர் உறுப்பினரை இப்பேரவை தேர்தெடுக்க முற்பட வேண்டும்' என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4. அறிவிப்புகள்.

(அ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மை பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத் தாள்களை 6—7—1971, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர், செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 7—7—1971, புதன்கிழமை காலை 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—7—1971, வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.